பதிவு அஞ்சல் ஒப்புதல் அத்தாட்சியுடன்

# தேசிய நெடுஞ்சாலை

| அனுப்புநர்: | பெறுநர்: |
| --- | --- |
| திருமதி எம் எஸ் செல்வி, எம்.இ.<br>கண்காணிப்புப் பொறியாளர்,<br>தேசிய நெடுஞ்சாலை,<br>மதுரை. | திரு R.P.S சங்கரபாண்டி,<br>9-11/10, நாடார் தெரு,<br>ஆண்டிப்பட்டி,<br>தேனி மாவட்டம்-625 512. |

கடித எண்.2821/2024/இ.வ.அ-1/தே.நெ, நாள்: 05.12.2024.

பொருள்: மதுரை (தே.நெ) வட்டம் – மதுரை (தே.நெ) கோட்டம் – மதுரை கொச்சின் தேசிய நெடுஞ்சாலை எண்.49நீட்சி (புதிய தே.நெ எண்.85) கி.மீ.77/4-ல் 4.0 மீ X 2.0 மீ அளவில் ஒற்றைகண் சிறுபாலத்தை திரும்ப கட்டுதல் பணி – வேலை உத்திரவு வழங்குதல் – தொடர்பாக

பார்வை: கோட்டப் பொறியாளர் (தே.நெ) மதுரை அவர்களின் கடித. எண். டி.ஆர்.பி. எண். 28/2024-25/இ.வ.அ-1, நாள்: 15.11.2024 மற்றும் 29.11.2024.

*****

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவரது சார்பிலும், மேலே குறிப்பிட்டுள்ள பணிக்கு தங்களால் மதிப்பீட்டு (2024-2025) விலையைவிட 0.02% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 28,78,430/- (ரூபாய் இருபத்து எட்டு இலட்சத்து எழுபத்தி எட்டாயிரத்து நானூற்று முப்பது மட்டும்) (Excluding GST) ஒப்புக் கொள்ளப்படுகிறது. மேலும், இக்கடிதம் கிடைக்கப் பெற்ற 15 (பதினைந்து) தினங்களுக்குள் இத்துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உடன்படிக்கை செய்ய இவ்வலுவலகத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தங்களால் ஒப்பந்தப்புள்ளியில் முன்வைப்புத் தொகையாக ரூ. 25,000/- க்கு வங்கி வைப்பு கொகைக்கான இரசீது வடிவத்தில் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்துள்ளீர்கள். ஒப்பந்த நிபந்தனைகளின்படி ஒப்பந்த தொகையில் 2% சதவீதம், பிணை வைப்புத் கொகையாக ரூ. 58,000/- கோட்டப் பொறியாளர் (தே.நெ) மதுரை பெயரில் கீழ்க்குறிப்பிட்ட ஏதாவது ஒரு வடிவில் செலுத்தப்பட வேண்டும்.

1. அஞ்சலக தேசிய சேமிப்புப் பத்திரங்கள்
   (அல்லது)
2. அஞ்சலக வைப்பு தொகைக் கணக்குகள்
   (அல்லது)
3. கிஸான் விகாஸ் பத்திரங்கள்
   (அல்லது)
4. தேசிய மயமாக்கப்பட்ட வங்கி வைப்புத் தெகைக்கான ரசீது.

மேற்கூறிய வடிவில் பிணை வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப் பத்திரம் மேற்கொண்ட பின் தங்களால் செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையினை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

உடன்படிக்கையில் கையெழுத்திடும் முன் நடப்பு ஆண்டிற்கான வணிகவரி செலுத்தியதற்கான சான்றிதழ் மற்றும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்து உள்ளதற்கான சான்றிதழ்கள் ஆகியவற்றை ஒப்பந்தப்பத்திரத்தில் கையெழுத்திட வரும்போது கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

| வேலையின் மதிப்பு | தொழில்நுட்ப உதவியாளர்கள நியமனம் பற்றிய விபரம் |
|---|---|
| ரூ. 28,78,430/-<br>(Excluding GST) | 1 நபர் பி.இ. பட்ட படிப்பு (அமைப்பியலில்)<br>மூன்று வருட முன் அனுபவம் (அமைப்பியலில்) |

மேற்கண்ட தொழில்நுட்ப உதவியாளர்களின் கல்விச் சான்றிதழ் மற்றும் அத்தாட்சியுடன் சுயவிபர அன்னாரது புகைப்படம் ஒட்டப்பட்ட நகலையும் இணைத்து மேற்படி வேலைக்கு தொழில் நுட்ப உதவியாளராகப் பணிபுரிய சம்மதம் தெரிவித்து கடிதம் தரப்பட வேண்டும். மேலும், அக்கடிதத்தில் எந்த ஒரு ஒப்பந்தக்காரருக்கும் யாதொரு பணிக்கும் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரியவில்லை என்ற உறுதி மொழியையும் அளிக்க வேண்டும்.

இந்த உடன்படிக்கை அரசுக்கும் தங்களுக்கும் இடையே உள்ள அடிப்படை உரிமைகளை வழங்கும் பத்திரம் என அறியவும். இந்த உடன்படிக்கையில் முதலில் தாங்கள் கையெழுத்திட்டபின் தமிழ்நாடு ஆளுநருக்காக, கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) வட்டம், மதுரை அவர்கள் கையொப்பமிடுவார்கள். ஒப்பந்த உடன்படிக்கை கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) மதுரை அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்புதான் இப்பணி தங்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும். ஒப்பந்த உடன்படிக்கை ஏற்றுக் கொள்வதற்கு முன் தாங்கள் இப்பணியினைச் செய்தால், அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு இத்துறை பொறுப்பேற்காது.

மேற்குறிப்பிட்ட முறையில் தாங்கள் ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் கையெழுத்திடத் தவறினால் இதுவே இறுதிக் கடிதமாகக் கருதி எஸ்.எஸ்.ஆர்.பி.பி.எஸ்.எஸ் விதி எண். 104-05ன்படி, இவ்வேலை உத்திரவினை ரத்து செய்வதுடன் ஒப்பந்தப்புள்ளியுடன் தங்களால் இணைக்கப்பட்ட முன்வைப்புத் தொகையினை அரசு கணக்கில் வரவு வைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ள்ளபடுகிறது.

(ஒம்)/- எம்.எஸ். செல்வி
கண்காணிப்புப் பொறியாளர்
(தே.நெ) வட்டம், மதுரை

நகல்: கோட்டப் பொறியாளர் (தே.நெ) மதுரை

//உண்மை நகல்//உத்தரவுப்படி//

Signature Not Verified
Digitally signed by M MURUGAN
Date: 2025.01.27 16:37:01 IST
Location: eProcure-EPROC

5/12/24
தலைமை வரைவு அலுவலர்,
(தே.நெ) கோட்டம், மதுரை-02.

05/12/24